வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.7764/அ.2/2016 நாள்.28.02.2024

பொருள் பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அகத்தணிக்கை – கூட்டமர்வு – (Join Siting) கடந்த கால தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்தல் - உரிய ஆவணங்கள் தயார் நிலையில் வைத்திருக்க தகவல் தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை சென்னை-6 தமிழ்நாடு, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.08056/அகத/2022 நாள். 07.12.2022

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு /நகரவை /அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள், மாவட்டக் கல்வி அலுவலகங்கள் / வட்டாரக் கல்வி அலுவலகங்கள் மற்றும் இதர சார்ந்த அலுவலகங்களில் கையாளப்படும் வரவு, செலவு கணக்குகள் மற்றும் பணியமைப்பு சார்பான விவரங்கள் (Accounts and Service Matters) மீது துறை அகத்தணிக்கை மூலம் எழுப்பப்பட்ட தணிக்கை தடைகளை அவ்வப்போது மாவட்ட வாரியாக தணிக்கை கூட்டமர்வு நடத்தி, தடை நிவர்த்தி (On the spot Ratification) மேற்கொள்வதோடு நேரடியாக பெறப்படும் தணிக்கை தடை கருத்துருக்களை நிவர்த்தி செய்து ஆணை வழங்கப்படவுள்ளது என பார்வையில் காணும் செயல்முறைகளின் படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீண்ட கால தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்யும் வகையில் எதிர்வரும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பள்ளி பொதுத் தேர்வுக்குப் பின்னர் 15.04.2024 முதல் மாவட்ட வாரியாக தணிக்கை கூட்டமர்வு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே சார்நிலை அலுவலகங்கள் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் சார்பாக முந்தைய காலங்களில் துறை தணிக்கை மூலம் எழுப்பப்பட்ட தடைகளை நிவர்த்தி செய்யும் வகையில் தொடர்புடைய ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருக்க சார்ந்த அலுவலகங்கள்/ பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கூட்டமர்வு நடத்த உத்தேசிக்கப்பட்ட காலத்திற்கு முன்னர் இடைப்பட்ட காலங்களில் வழக்கம்போல் (On Usual) தணிக்கை தடை நிவர்த்தி கருத்துருக்களை சென்னை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு நேரடியாக அனுப்பி நிவர்த்தி செய்ய அனைத்து சார்நிலை அலுவலர்கள் மற்றும் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

(த.பி.பா)

தற்போது நடப்பாண்டில் 15.04.2024க்குப் பிறகு உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்ட வாரியாக தணிக்கை தடை நிவர்த்தி இணையமர்வு கூட்ட கால அட்டவணை பின்னர் தெரிவிக்கப்படும்.

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்

**பெறுநர்**

1.அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(தனியார் / இடைநிலை / தொடக்க கல்வி )
வேலூர் மாவட்டம்.

2. தலைமை ஆசிரியர்கள்,
அனைத்து அரசு / நகரவை / அரசு உதவி பெறும் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

**நகல்**. சென்னை.6, பள்ளிக் கல்வி
இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

(த.பி.பா)